பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

27 08-2025 6.30

புதன்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின்கீழ் சாலையோர வியாபாரிகள் கூடுதலாக கடனுதவி பெறுவதற்கு மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது.

- அரிசி மற்றும் கோதுமை உற்பத்தியில் இந்தியா தற்சார்புடைய நாடாக திகழ்கிறது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

- தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் இருந்து ஆண்டுக்கு 25 செயற்கைக்கோள்களை ஏவ திட்டமிடப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் கூறியுள்ளார்.

- தமிழகத்தில் 5 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு தேசிய தர நிர்ணய சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின்கீழ் கடனுதவி பெறும் சாலையோர வியாபாரிகள் பயன்பெறும் வகையில் மத்திய அரசு இந்த திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் இந்தத் திட்டம் 2030ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 7 ஆயிரத்து 332 கோடி ரூபாய் நிதி வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்த திட்டத்தின்கீழ் கடன் அட்டைகளைப் பெற்றுள்ள பயனாளிகள், தாங்கள் பெற்ற கடனை முறையாக திருப்பிச் செலுத்தும் பட்சத்தில் கூடுதலா கடனுதவி வழங்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக பெற்ற கடனை கடன் அட்டைகள் மூலம் முறையாக திருப்பிச் செலுத்தும் சிறு வியாபாரிகள், 15 ஆயிரம் ரூபாய் வரை மறு கடன் பெறலாம்.

இரண்டாவது கட்டமாக கடனை திருப்பிச் செலுத்தும் சிறு வியாபாதிகள் 25 ஆயிரம் ரூபாய் வரை கடனுதவி பெறலாம்.

மூன்றாவது கட்டாக அதிகபட்சமாக 50 ஆயிரம் ரூபாய் வரை கடனுதவி பெற்றுக்கொள்ளலாம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 50 லட்சம் புதிய பயனாளிகள் உட்பட ஒரு கோடியே 15 லட்சம் பேர் பயனடைவார்கள் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அரிசி மற்றும் கோதுமை உற்பத்தியில் இந்தியா தற்போது தற்சார்புடைய நாடாக திகழ்கிறது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

குவாலியரில் இன்று நடைபெற்ற 64வது கோதுமை மற்றும் பார்லி ஆராய்ச்சி பணியாளர்கள் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு இதனைத்

தெரிவித்த திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், கடந்த 11 ஆண்டுகளில் நாட்டின் கோதுமை உற்பத்தி 86 புள்ளி ஐந்து மில்லியன் டன்னில் இருந்து 117 புள்ளி 5 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது என்று தெரிவித்தார்.

இந்த 44 சவீத வளர்ச்சி வேளாண் விஞ்ஞானிகளின் அயராத முயற்சி, சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்கள், விவசாய பெருமக்களின் அயராக உழைப்பு ஆகியவற்றால் கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கோதுமை மற்றும் அரிசி உற்பத்தி போதிய அளவு உள்ளபோதிலும் இதன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

பருப்பு, எண்ணெய்வித்துக்கள் போன்ற உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து அவற்றின் இறக்குமதியைக் குறைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பார்லி உள்ளிட்ட பாரம்பரிய தானிய வகைகள் மருத்துவ குணம் மிக்கவை என்றும், அவற்றின் உற்பத்தியை அதிகரித்து நாட்டு மக்களின் ஆரோக்கியத்தைக் காக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தாது மற்றும் உயிர்ச்சத்துப் பொருட்கள் கொண்ட கோதுமையை உற்பத்தி செய்வதற்கான முயற்சியை விஞ்ஞானிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான கல்வியறிவையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

போலியான உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றை விற்கும் நிறுவனங்கள் மீது மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் என்றும், அந்த நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சிறு, குறு, நடுத்தர விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த சாகுபடி முறை மிகுந்த பயனளிக்கும் என்று கூறிய அவர், விவசாயம், கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு,

மீன்வளர்ப்பு, தோட்டக்கலைப் பயிர் சாகுபடி ஆகியவற்றை விவசாயிகள் ஒருங்கிணைந்து மேற்கொள்வதற்கு தேவையான உதவிகளையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும் என்றும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தினார்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம் ரக்கெட் ஏவுதளத்தில் இருந்து ஆண்டுக்கு 25 செயற்கைக்கோள்களை ஏவ திட்டமிடப்பட்டுள்ளதாக இந்திய விண்வெளி ஆய்வு மைய தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

குலசேகரப்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி பேசிய அவர், அடுத்த ஆண்டு செப்டம்பரில் இருந்து டிசம்பர் மாதத்திற்குள் சிறிய ரக செயற்கைக்கோள்கள் ஏவப்படும் என்றும் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மத்திய அரசின் தேசிய தர நிர்ணய சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி, தேனி அரசு மருத்துவக் கல்லூரி, கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி, திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றுக்கு இந்த சான்றிதழ்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக மருத்துவ சேவை உறுதி செய்யப்பட்ட காரணத்தால்தான் தேசிய தர நிர்ணய மதிப்பீட்டின்படி 5 மருத்துவமனைகளுக்கும் மத்திய அரசு இந்த சான்றிதழை வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.

சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கடந்த 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மிகச் சிறப்பான வகையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இன்று எமது செய்திப்பிரிவுக்கு பேட்டியளித்த அவர், மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாகக் கூறினார்.

தமிழக கடலோரப் பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு சூறைக்காற்று வீசக்கூடும் என்றும், மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறினார்.

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

தூத்துக்குடியில் இன்று நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி ஓவியப் போட்டியில் ஏராளமான பள்ளி மாணவ-மாணவியர் கலந்துகொண்டனர்.

------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் கிளாப்பாளையம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேகம் இன்று காலை வெகுவிமரிசையாக நடைபெற்றது.

------------

புதுக்கோட்டை மாவட்டம் முத்துனேந்தல் மீனவ கிராமத்தில் கடற்பாசி வளர்ப்புப் பயிற்சி இன்று தொடங்கி 10 நாட்கள் நடைபெற்று வருவதாக மீனவளத்துறை உதவி இயக்குநர் திரு. பஞ்சராஜா தெரிவித்துள்ளார்.

------------

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு திருச்சி மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோவில், நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அருள்மிகு மகாகணபதி கோவில், சேலம் ராஜகணபதி கோவில் உள்ளிட்ட விநாயகர்

கோவில்களில் நடைபெற்ற சிறப்பு பூஜைகளில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் கபிலா - தனீஷா கிரஸ்டோ இணை அயர்லாந்தின் ஜோஷ்வா மேகி - மோயா ரியான் இணையை வென்றது.

பாரீசில் நடைபெற்ற இப்போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்திய இணை 21-11, 21-16 என்ற செட் கணக்கில் வென்றது.

-------------

வில்வித்தை ப்ரீமியர் லீக் போட்டிகள் அக்டோபர் 2ஆம் தேதி புதுதில்லியில் தொடங்குகிறது.

இதற்கான அறிவிப்பை இந்திய வில்வித்தை சங்கம் இன்று வெளியிட்டுள்ளது.

<<<<The End>>>>